கட்சிக்கும் அங்கு பிரதிநிதித்துவம் இருக்கிற காரணத்தால் அதை ஆய்ந்து 31 ஆம் தேதி டெல்லிக்கு நமது உறுப்பினர்கள் செல்கிறபோது சரியான தகவலை need based report, we have to submit to the delimitation Committee. அதற்கு அரசியல் கட்சிகளுடைய கருத்தையும் பெற்று ஒருங்கிணைத்து அதை டெல்லிக்கு நாம் அனுப்புவோம்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா எண் 304, திரு. டி. மணி. மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.*

304—

நீதிமன்றக் கட்டடம்

***3364-திரு. டி. மணி:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை நீதிமன்றக் கட்டட வளாகம் கட்டப்படுவதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே,

(அ) சென்னை உயர் நீதிமன்றம் அனுப்பிய முன்னுரிமைப் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

(ஆ) முன்னுரிமைப் பட்டியலில் கண்ட திட்டங்களுக்கான கோரப்பட்ட நிதியுதவி மைய அரசிடமிருந்து பெறப்பட்டவுடன் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 2002-2003 ஆம் ஆண்டு வாக்கில் இதுசம்பந்தமான மதிப்பீடுகள்

2003 ஏப்ரல் 24]

எல்லாம் அந்தப் பகுதியிலே தயாரிக்கப்பட்டு, அந்த மதிப்பீடுகளின் அடிப்படையிலே உடனே கட்டடம் கட்டப்படும் என்று அந்த நீதிமன்றங்களிலே இருக்கிற அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள். ஆனால், மாண்புமிகு அமைச்சருடைய பதிலைக் கேட்கின்றபோது மீண்டும் காலதாமதம் ஏற்படும் என்று தோன்றுகிறது. ஏற்கெனவே வெள்ளைக்காரர் ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்ட பழைய கட்டடங்கள் அவை. எந்த நேரமும் உடைந்து விழும் என்றவொரு ஆபத்தான நிலையில் உள்ளது. ஆகையால் இந்தப் பட்டியலை வைத்து மாநில அரசாங்கம் இதில் நிதியை ஒதுக்கிச் செய்வதற்கு ஏதாவது வழி உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் மொத்தம் 6 நீதிமன்றங்கள் இயங்குகின்றன. அதிலே இரண்டு நீதிமன்றங்கள் வெவ்வேறு இடங்களில் இயங்குகிற ஒரு சூழ்நிலையால், வழக்கறிஞர்கள், பொது மக்கள் கஷ்டப்படக்கூடாது; மாண்புமிகு உறுப்பினருடைய அந்த கோரிக்கையும் ஒரு நல்ல நிலையிலே நிறைவேற்றப்பட வேண்டுமென்ற ஒரு நல்ல எண்ணத்தோடுதான் ஒருங்கிணைந்த அந்த நீதிமன்றக் கட்டடம் ஒரே இடத்தில் அமைய வேண்டும் என்று உங்களைக் காட்டிலும் அரசு அதிக அக்கறை எடுத்து அதன் அடிப்படையிலே கிட்டத்தட்ட 2 கோடியே 63 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு இடம்பெற்று மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. எனவே மத்திய அரசு தாராளமாக நிதி ஒதுக்குகின்ற அந்தச் சூழ்நிலையில், ஒருங்கிணைந்த அந்த நீதிமன்றக் கட்டடம் 2 கோடியே 63 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் உதயமாகும்போது நிச்சயமாகப் பொது மக்கள், வழக்கறிஞர்கள் எல்லோரும் பயன் பெறுகின்ற நிலை; ஒரே இடத்திலே வழக்குகள் தாக்கல் செய்கின்ற நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, அந்த நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் அந்த infrastructure அடிப்படை வசதிகளை நாம் உருவாக்கும்போது 1993-94 ஆம் ஆண்டிலிருந்து ஒரு திட்டம்; அதாவது மத்திய அரசு 50 சதவிகிதம் போட வேண்டும், மாநில அரசு 50 சதவிகிதம் போட வேண்டும் என்று இருக்கிறது. எனவே, இதில் மாநில அரசு தாராளமாக, கிட்டத்தட்ட அதிகமான அளவிற்கு நீதித் துறைக்கு

உரிய நிதி உதவி அளித்திருக்கிறது என்பதற்கு 12-11-2002 நாளிதழில், As far as Tamil Nadu is concerned upto March 31, 2002 the State should have spent only Rs.595.7 crores including its share of Rs.297.8 crores. But as per the cumulative utilisation certificate sent by the State it has spent a total of Rs.935.9 crores thus exceeding its share. எனவே, நம்முடைய 50 சதவிகிதம், அந்தப் பணத்தை matching grant-க்கு மேலாக நாம் போட்டும்கூட மத்திய அரசு அந்த அளவு நமக்குப் பணம் தரவில்லை. ஒவ்வோர் ஆண்டும் ரூ.2 கோடி, ரூ.3 கோடி என்று கொடுத்தால் யானைப் பசிக்கு சோளப்பொரி என்பது போல; அது எப்படிச் சரியாக இருக்கும்? எனவே மாண்புமிகு உறுப்பினருடைய அந்த இயக்கம் அகில இந்திய இயக்கம் என்கிற ரீதியில் - அந்த விவரங்களை எல்லாம்கூட மாண்புமிகு உறுப்பினருக்குத் தருகிறேன் - பாராளுமன்றத்திலே இந்தப் பிரச்சினையை எடுத்து வைத்தால் நிச்சயமாக நம்முடைய மாநில அரசுக்குப் போதிய நிதி உதவி கிடைக்கும். இந்த ஆண்டு தொடர்ந்து நாங்கள் வற்புறுத்தியதன் காரணமாக முதல் தவணையாக ரூ.2 கோடியே 83 இலட்சத்து 93 ஆயிரத்தை மத்திய அரசு விடுவித்திருக்கிறது. இரண்டாம் தவணையாக ரூ.2 கோடியே 30 இலட்சத்தை விடுவித்திருக்கிறது. எனவே இதில் 110 கோடி ரூபாய்க்கு நாம் ஒரு கருத்துருவை அனுப்பும்போது 70 கோடி ரூபாய் மாநில அரசினுடைய பங்கை நாம் செலுத்துவதற்குத் தயாராக இருக்கின்றோம். ரூ. 70 கோடி அவர்கள் கொடுத்து விட்டால், உறுப்பினர்களுடைய இந்தக் கேள்வி தினந்தோறும் எழுகின்ற அந்தப் பிரச்சினை - இந்த அவையில் இருக்காது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மணி.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் தந்த விரிவான விளக்கத்திற்கு நன்றி. இருந்தாலும், எங்களைவிட அதிகமாக உறவு வைத்து கொண்டு இருக்கின்ற அல்லது நெருக்கமாக இருக்கின்ற இந்த அரசு, மத்திய அரசோடு தங்களுடைய கருத்தை மீண்டும் வலியுறுத்தி, நமக்குக் கிடைக்க வேண்டிய (சிரிப்பு) இன்னும் சொல்லவில்லையே அதுதான் (சிரிப்பு). எனவே மத்திய அரசிடம் இன்னும் நம்முடைய கோரிக்கையை, மாநில அரசினுடைய

2003 ஏப்ரல் 24]

கோரிக்கையை வலுவாக வலியுறுத்தி அந்தத் தொகையை முழுவதுமாகப் பெற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். எங்களைப் பொறுத்தமட்டில், எங்களுடைய கட்சியின் சார்பிலே, எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வழியாக இந்தப் பிரச்சினையை மத்திய அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு நாங்களும் தயாராக இருக்கின்றோம் என்பதை இந்த அவையில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறவைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னார்கள். மத்திய அரசிற்கு இருக்கின்ற உறவைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தெளிவாக இந்த அவையிலே விளக்கி விட்டார்கள். நான் மேலும் விளக்க விரும்பவில்லை. ஆனால் ரகசிய உறவு, புதிய உறவு தேடிக் கொண்டவர்களுக்கெல்லாம்--நிச்சயமாக அவர்களுடைய மனசாட்சிக்குத்--தெரியும். அவர்கள் அங்கே தட்டினால் நிச்சயமாகக் கிடைக்கும் என்ற ஒரு நம்பிக்கை உண்டு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 305, திரு. என்.கே. பெருமாள், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்.

305—

கட்டடம்

***12912—திரு. என்.கே. பெருமாள்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் நகரில் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களுக்கு வழக்கறிஞர்களுக்கான அறைகளுடன் கூடிய புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,